<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

ம.சா. 1 நாள்.19.07.2023

| MCOP No. | 73/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | சரண் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையில் கண்ணதாசன், சதாம்முசேன், இளவரசன் என்ற மூன்று நபர்கள் மீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கண்ணதாசன் அந்த பேருந்தில் நடத்துனர் ஆவார். ஓட்டுநர் சதாம்முசேன் ஆவார். இளவரசன் எதிரே வந்த டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநர் ஆவார். முதல் தகவல் அறிக்கையில் தனியார் பேருந்தில் வலது பக்க ஜென்ல் ஓரமாக என் வலது கையை வைத்து கொண்டு உட்கார்ந்து இருந்தேன், அப்போது பேருந்து நடத்துனர் மற்றும் ஓட்டுநர் என்னை எச்சரிக்கை செய்யாமல் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பேருந்தில் நடத்துனர் மற்றும் ஒட்டுநர் என்ன எச்சரிக்கைவில்லை என்றால் பேருந்து ஜென்னல் ஓரத்தில் உட்கார வேண்டாம் என்று சொல்லவில்லை என்பது தான். பேருந்தின் ஜென்னல் ஓரத்தில் உட்கார கூடாது என்று எந்த விதிமுறைகளிலும் இல்லை என்றும், நான் ஜென்னல் ஓரத்தில் கையை வெளியே நீட்டி வந்ததால் தான் அவர்கள் எச்சரிக்கைவில்லை என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு முன்பாகவும் பின்பாகவும் சுமார் 500 மீட்டர் போகும் வரை நேரான ரோடு என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்த வேறு யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. பேருந்து மற்றும் டாடா ஏஸ் வாகனங்களுக்கு எந்த சேதமும் இல்லை என்பது ம சா ஆ 3, 6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் என்பது கிழக்கு, மேற்கு ரோடு ஆகும். பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றது, டாடா ஏஸ் வாகனம் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தது. நான் ஒட்டுநர் பக்கத்தில் பேருந்து பின் புறத்தில் இருந்து மூன்றாவது இருக்கையில் ஜென்னல் ஓரத்தில் அமர்ந்திருந்தேன். சம்பவ மாதிரி வரைபடத்தில் மேற்கு, கிழக்கு ரோட்டின் இடது பக்கம் விபத்து ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். வரைபடத்தை பார்த்தாலே டாடா ஏஸ் வாகனம் சாலை விதிகளின் படி எந்த இடத்தில் போக வேண்டுமோ அந்த இடத்தில் தான் சென்றது என்றால் சரியல்ல. டாடா ஏஸ் வாகனம் சரியான இடத்தில் சரியான வழியில்

தான் சென்று கொண்டிருந்த்து என்றும், பேருந்தில் அமர்ந்து கொண்டிருந்த நான் தான் கையை வெளியே நீட்டி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கையை வெளியே நீட்டி சென்று பயணம் செய்ய கூடாது என்பது தெரியும் என்பதால் தான் புகாரில் ஓடத்துனர் மற்றுமத் ஒட்டுநர் எச்சரிக்கை செய்யவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த விபத்திற்கு காரணமே நானும், என்னை எச்சரிக்கை செய்யாத பேருந்தின் நடத்துனர் மற்றும் ஒட்டுனரும் தான் என்றால் சரியல்ல. டாடா ஏஸ் வாகனத்தில் வாழை தார் ஏற்றி சென்றார்கள். இந்த விபத்தில் மற்ற யாருக்கும் காயம் ஏற்படாத காரணம் அவர்கள் அனைவரும் விதிகளை பின்பற்றி பயணம் செய்ததால் தான் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்று நான் செங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மயிலாடுதுறை அரசு மருத்துவ மனைக்கு வந்து அங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் கிருஷ்ணா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். ம சா ஆ 2ல் பேருந்தில் பயணம் செய்த போது வலது கையை ஜென்னலுக்கு வெளியே நீட்டி கொண்டு சென்றதால் டாடா ஏஸ் வாகனம் என்னை இடித்து விபத்து நடந்தது என்று நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் சொல்லப்பட்டுள்ளது. நான் விருப்பப்பட்டு தான் என்னை மருத்துவ சிகிச்சையில் இருந்து விடுவிப்பதாக என்னை விடுவித்துள்ளார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் 31/07/2020 முதல் 04/08/2020 வரை கிருஷ்ணா மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்து கொண்டதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் மருத்துவரின் பரிந்துறையை ஏற்காமல் தன்னிச்சையாக விடுவிக்க வலியுருத்தியதால் பின்னர் ஏற்பட்ட உபாதைகளுக்கு எங்கையாவது சிகிச்சை எடுத்திருக்கலாம் என்றும், அதற்கும் நான் தான் காரணம் ஆவேன் என்றாலும் சரியல்ல. 6 மாதத்திற்கு பின்னர் பிலேட் எடுக்க அவர்கள் கூறியிருந்தார்கள். 7 மாதத்தில் எனக்கு வலி வந்ததால் எனக்கு வைக்கப்பட்ட 3 பிலேட்களில் 2 பிலேட் எடுத்துவிட்டேன், இன்னும் 1 பிலேட் உள்ளது. நான் இரண்டாவதாக சிகிச்சைகாக சேர்ந்தற்கான மருத்துவரின் மருத்துவ குறிப்புகள், விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ விடுவிப்பு சான்று ஆகியவற்றை தாக்கல் செய்ததால் தான் நான் செய்துள்ள மருத்துவ பில்கள் ஏற்றுக் கொள்ள கூடியது என்றால் சரியல்ல. ம சா ஆ 10ல் முதல் பில்ளில் எனது பெயர் இல்லை என்றால் சரியல்ல. அது போல் 9, 10, 13, 16, 19, 20, 21, 23, 24, 28, 29, 30, 31, 32, 33, 36, 37, 38, 39, 40, 41, 42, 44 ஆகிய பில்களில் சில இடங்களில் கையால் எழுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் கிருஷ்ணா மருத்துவ மனையில் தான் சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் தாக்கல் செய்துள்ள 96 மருத்துவ பில்களில் பேய்டு சீல் இல்லாத பில்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. கிருஷ்ணா மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் இருந்தது என்றால் நான் சுற்றி பார்க்கவில்லை. நான் முதல் தளத்தில்

206 அறையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் தாக்கல் செய்துள்ள பில்களில் 96வது பில்ளின் 200 வது அறையில் சிகிச்சையில் இருந்தவருக்கான பில்கள் என்றால் சரியல்ல. 95 வது பில்லானது 106 அறையில் சிகிச்சை பெற்றவருக்கானது என்றால் சரியல்ல. ரூ.1,32,000/- செலவு செய்தததற்கு ம சா ஆ 9 ஆவணம் ஏற்று கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் B.Sc. Chemistry இறுதி ஆண்டு படித்து கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது. நான் எந்த வருடம் பிறந்தேன். 06/06/ 2000 ஆகும். நான் அந்த வருடம் இறுதி ஆண்டு முடிக்கவில்லை 2020 மே மாதத்தில் தான் கல்லூரி இறுதி ஆண்டு முடித்தேன். நான் 2019 டிசம்பரில் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்திருந்தால் மே 2020 ல் தான் கல்லூரி இறுதி ஆண்டு படித்து முடித்துவிட்டேன் என்றால் கோரோனா காலம் என்பதால் அரசால் அனைவரும் தேர்ச்சி பொடப்பட்ட காரணத்தினால் நான் முடித்துவிட்டேன். எனக்கு இந்த விபத்தினால் எனக்கு எந்தவித கல்வியிலும் வேலை கிடைப்பத்திலும் எந்த குறைபாடும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த கவனக்குறைவும் அஜாக்கிரதையும் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையும் காரணம் என்பதாலும், டாடா ஏஸ் வாகனத்தின் கவனக்குறைவு இல்லை என்பதால் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் அதிக இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

4ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுதலின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.